மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பெஞ்சமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த இடத்தை மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***11890—திரு. என். சுரேஷ் ராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் மாவட்ட நிருவாகத்தின் பரிசீலனையில் உள்ளது. நிலமாற்றம் செய்யப்பட்டவுடன், உரிய நிதியைப் பெற்று சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜனவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகக் கேட்கப்பட்ட கேள்வி. அப்போது நாகர்கோவிலில் இயங்கிவந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தற்போது 20 கி.மீ. தொலைவில் உள்ள விசுவாசபுரம் என்கிற கிராமத்தில் இயங்கி வருகிறது. மாவட்டத்தின் தலைநகரமாகிய நாகர்கோவிலில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இயங்கி வந்தால்தான் முறையாகவும், வசதியாகவும் இருக்கும். மீண்டும் அந்த அலுவலகத்தை நாகர்கோவில் வட்டாரப் பகுதிகளில் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின்மூலம் அந்த இடத்தினுடைய நிலமாற்றம் செய்யும் பணிகளை விரைவாக முடித்துக் கொடுத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கப்படும்போது, அதற்குண்டான கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கிவரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைப் பொறுத்தமட்டில், அங்கு கடந்த 6 மாதங்களாக காலிப் பணியிடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இது அரசின் கவனத்திற்கு பலமுறை கொண்டுவரப்பட்டும், வட்டாரப்

போக்குவரத்து அலுவலர் பணியிடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. அதேபோன்று, 4 ஆய்வாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் அந்த நான்கு பணியிடங்களுமே காலியாக இருக்கக்கூடிய நிலை உள்ளது. 2 கண்காணிப்பாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில், இரண்டு பணியிடங்களுமே காலியாக இருக்கின்றன. அங்கு தினந்தோறும் 100–க்கும் மேற்பட்ட வாகனங்கள் பதிவு செய்ய வேண்டிய நிலை இருக்கக்கூடிய சூழ்நிலையில், வாரத்தில் ஒருநாள் மட்டும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்தும், மார்த்தாண்டம் பகுதியிலிருந்தும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் இங்கு வந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். 7 நாட்களில் பதிவு செய்ய வேண்டிய பணிகள், வாரத்தில் ஒரு நாள் மட்டுமே நடைபெறுகின்ற காரணத்தால், வாகனங்களைப் பதிவு செய்யக்கூடியவர்கள் மற்றும் புதுப்பிக்கக்கூடியவர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே, உடனடியாக காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, தற்போது தேர்வுகள் நடைபெற்றுள்ளன. முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன், அதற்குண்டான ஆணையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுத்து, அந்தந்தக் காலிப் பணியிடங்களில் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]